1989 ஏப்ரல் 28]

(ஆ) வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம்) மற்றும் தனி அலுவலர்கள் நியமனத்தைச் செல்லத்தக்கதாக்குதல் சட்ட முன் வடிவு, 1989 :

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம்) மற்றும் தனி அலுவலர்கள் நியமனத்தை செல்லத்தக்கதாக்குதல் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

4. மானியக் கோரிக்கைகள், 1989-90—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 2—மாநில ஆயத் தீர்வைத் துறை
(ஆ) கோரிக்கை எண். 15—காவல்துறை மற்றும்
(இ) கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள்
} தொடர்ச்சி

***திரு. ரெ. பிச்சைமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை, மாநில ஆயத் தீர்வைத் துறை ஆகியவை மீதான மானியக் கோரிக்கைகளின்மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். காவல் துறை என்பது கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டோடு செயல்பட வேண்டிய ஒரு துறை. ஆனால் இன்று தமிழகத்தில் அந்த நிலைக்குப் புறம்பான காரியங்கள் நடப்பதாக தினசரி நாளிதழ்களில் செய்திகள் வந்தவண்ணம் இருக்கின்றன. இது அந்தத் துறைக்கு இழிவு ஏற்படுத்துகின்ற அளவுக்கு வந்துகொண்டிருக்கும் செய்திகள் ஆகும். அதாவது மக்களுடைய உயிருக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டிய அந்தத் துறையே அதற்கு நேர் மாறான முறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஒன்றை மட்டும் உதாரணத்திற்குக் கூற விரும்புகிறேன். குறிப்பாக பெரம்பலூர் தாலுக்காவிலே, திருச்சி மாவட்டம் அரியலூரிலே ஒரு சம்பவம் நடைபெற்றிருக்கிறது. அது தொடர்ந்து நடந்த சம்பவம். ஒரு குறிப்பிட்ட நாளில் மூன்று சம்பவங்கள் நடைபெற்றன. ஒரு